# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை
## 1988-89

©
தமிழ்நாடு அரசு
1989

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 1988-89.

### பொருளடக்கம்.


| வரிசை எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1 | பணியாளர் .. .. .. .. | 1—2 |
| 2 | வருவாய் மற்றும் செலவு .. .. | 2—3 |
| 3 | கடிதத் தொடர்பு அளவும் தேர்வாணையத்தின் அமர்வுகளும். | 4 |
| 4 | நேரடித் தெரிவுகள் .. .. .. | 4—5 |
| 5 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின மூலமாகத் தெரிவுகள். | 6 |
| 6 | சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன. | 7—9 |
| 7 | ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள் மனுக்கள் முதலியன. | 9—10 |
| 8 | அறிவிக்கைகள் .. .. .. .. | 10 |
| 9 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள். | 11—12 |
| 10 | தகுதியும் பொருத்தமும் உடைய பணி வேட்பாளர்கள் இல்லாமை. | 12 |
| 11 | அரசும் தேர்வாணையமும் .. .. | 12—29 |
| 12 | ஒப்புகை .. .. .. .. | 29 |

பக்கம்

பின் இணைப்புகள்.

| | | |
|---|---|---|
| 1. | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 30 |
| 2. | நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விபரம். | 31—32 |
| 3. | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்களை தெரிவு செய்யப் பட்ட பதவிகள். | 33—35 |
| 4. | தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதி 1954, விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விபரம். | 36—39 |
| 5. | ஒழுங்கு நடவடிக்கைகள், மனுக்கள் முறையீடுகள் விபரம். | 40—45 |
| 6. | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் .. | 46—47 |
| 7. | சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளின் விபரம். | 48 |
| 8. | அலுவலருக்கான அரையாண்டுத் தேர்வு களும் மொழிப் புலமைத் தேர்வுகளும். | 49—51 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

## ஆண்டறிக்கை 1988—89.

## பகுதி—1, பணியாளர்.

### தேர்வாணையம்.

திரு. தி. லட்சுமிநாராயணன், இ.ஆ.ப.(ஓய்வு).—
தலைவர்.

திரு. எம். எஸ். அப்துல் காதர், பி.எஸ்.சி.—
உறுப்பினர்.

திரு. ஓ. அ. கனகசபை, பி.ஏ.,பி.டி.,பி.எல்.—
உறுப்பினர்.

திரு. அ. பொன்னம்பலம், பி.எஸ்.சி. (பொறியியல்),—
உறுப்பினர்.

திரு. ப. சுப்பராயன், எம்.ஏ.—உறுப்பினர்.

திரு. பொ. இல. பொன்னுசாமி,இ.ஆ.ப. (ஓய்வு).—
உறுப்பினர்.

திரு. இரா. பொன்னுசாமி, பி.ஏ.,—உறுப்பினர்.

திரு. யு. எஸ். நடராஜன், இ.ஆ.ப.(ஓய்வு),—
உறுப்பினர்.

திரு. எம். இராமன், இ.ஆ.ப., பிப்ரவரி 21, 1989 பிற்பகல் வரை தேர்வாணைய செயலாளராகப் பணியாற்றினார்.

திரு. வே. குணாளன், இ.ஆ.ப.,தேர்வு கட்டுப்பாடு அலுவலர், பிப்ரவரி 22, 1989 முற்பகல் முதல் பிப்ரவரி 27, 1989 பிற்பகல் வரை தேர்வாணைய செயலாளர் பதவியின் கூடுதல் பொறுப்புக் களையும் சேர்த்து கவனித்தார்.

திரு. கு. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., பிப்ரவரி 28, 1989 முற்பகல் முதல் தேர்வாணைய செயலாளராகப் பொறுப்பேற் றார்.

திரு. டி. ஆர். இராமசாமி, இ.ஆ.ப., அக்டோபர் 22, 1988 பிற்பகல் வரை தேர்வாணையத்தில் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலராகப் பணியாற்றினார்.

திரு. வே. குணாளன், இ.ஆ.ப., அக்டோபர் 23, 1988 முற்பகல் முதல் தேர்வாணையத்தில் தேர்வு கட்டுப்பாடு அலுவலராக பொறுப்பேற்றார். மார்ச் 31, 1989-ன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி—2.

## வருவாய் மற்றும் செலவு.

### (1) வருவாய்.

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | நேரடித் தேர்வு மற்றும் இதர தேர்வுகள் | 1,310.00 |
| 2. | சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் .. | 17,19,687.00 |
| 3. | விண்ணப்ப படிவ விற்பனையில் கிடைத்த தொகை. | 820.60 |
| | மொத்தம் .. | 17,21,817.60 |

### (2) செலவுகள்.

| | | தொகை. (ரூபாய் ஆயிரங்களில்) |
|---|---|---|
| 01. | சம்பளங்கள்— | |
| 1. | அடிப்படை சம்பளம் .. | 69,51 |
| 2. | அகவிலைப்படி .. .. .. | 26,86 |
| 3. | மருத்துவச் செலவுகள் .. .. | 2,50 |
| 4. | ஏனையப் படிகள் .. .. | 20,08 |
| 7. | பயணச் சலுகைகள் .. .. | 94 |
| 8. | பண்டிகை முன்பணம் .. .. | 2,39 |

| | |
|---|---|
| 03. பயணச் செலவுகள் .. | 39 |
| 04. அலுவலகச் செலவுகள்— | |
| 1 தொலைபேசிக் கட்டணங்கள் .. | 1,34 |
| 2. ஏனையச் சில்லறைச் செலவுகள் .. | 9,90 |
| 05. தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்கு தொகை கோருதல். | 5,47 |
| 06. வாடகை, கட்டண விதங்கள், வரிகள் .. | 1,10 |
| 08. விளம்பர, விற்பனை, பிரச்சாரச் செலவுகள் | 2,60 |
| 15. இயந்திரமும் சாதனமும்— | |
| 1. வாங்குதல் .. .. .. | 14,76 |
| 3. பராமரிப்பு .. .. .. | .. |
| 16. மோட்டார் வண்டிகள்— | |
| 1. வாங்குதல் .. .. .. | .. |
| 2. பராமரிப்பு .. .. .. | 14 |
| 3. எரிபொருள் செலவு .. .. | 1,22 |
| | 1,59,20 |

<u>திருப்பிக் கொடுத்தது.</u>

1988—89 ஆம் நிதி ஆண்டில் தேர்வாணையத்தால் பெறப்பட்ட விண்ணப்பக் கட்டணங்களிலிருந்து ரூ. 523.00 விண்ணப்பதாரருக்கு திருப்பி கொடுக்கப்பட்டது.

## பகுதி—3.

### கடிதத் தொடர்பு அளவும் மற்றும் தேர்வாணையத்தின் அமர்வுகளும்.

நடப்பு ஆண்டில் தேர்வாணையம் 1,95,826 அஞ்சல்களைப் பெற்றது. (முன் ஆண்டில் பெறப்பட்ட அஞ்சல்களின் எண்ணிக்கை 3,57,498 ஆகும்) இவ்வாண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 56 வேலை நாட்கள் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. தேர்வாணையம் காலை மற்றும் மாலை வேளைகளில் நேர்முகத் தேர்வுகளை நடத்தியுள்ளது. அறிக்கைக் குரிய ஆண்டில் தேர்வாணையம் எத்தனை நாட்கள் எத்தனைக் கூட்டத் தொடர்களை நடத்தி உளளது என்பது கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுளளது.

| குழுமம். | நேர்முகத் தேர்வு நடை பெற்ற நாட்கள். | இரண்டு கூட்டத் தொடர். | ஒன்று மட்டும். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 6 | 19 | 19 (38) | .. | 228 |
| 5 | 18 | 18 (36) | .. | 180 |
| 4 | 2 | 2 (4) | .. | 16 |
| 2 | 14 | 14 (28) | 2 | 60(56+4) |
| 1 | 3 | 3 (6) | 1 | 7(6+1) |
| | | கூடுதல் | .. | 491 |

## பகுதி—4

### நேரடித் தெரிவுகள்.

அறிக்கைக்குரிய ஆண்டில் மொத்தம் 1626 பணி வேட்பாளர்களை நுட்பம் சார் பணிகளில் 14 வகை பதவிகளுக்கு நேரடித் தெரிவு மூலம் தெரிவு செய்யப்பட்டுளளனர். இவ் விவரங்கள பின் இணைப்பு-2இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## நுட்பம் சாரா பணிகள்

### தொகுதி இரண்டு பணிகள் :—

தொகுதி இரண்டு பணியில் 1987 பிப்ரவரி, மார்ச் திங்கள் எழுத்துத் தேர்வு நடைபெற்று 364 பணியிடங்களுக்கு 815 பணி வேட்பாளர்கள் வாய்மொழித் தேர்வுக்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாய் மொழித் தேர்வுகள் சூன் 19, 1989 முதல் நடத்தப் பெற்று சூன் 27, 1989 அன்று இறுதி முடிவுகள் வெளியிடப் பெற்றன.

### தொகுதி நான்கு பணிகள் :—

1986 ஆம் ஆண்டு நடந்த தொகுதி நான்கு தேர்வின் அடிப் படையில் தேர்வின் காத்திருப்போர் பட்டியலில் இருந்து 412 பணி வேட்பாளர்கள் இளநிலை எழுத்தர், காசாளர் மற்றும் ஊரக நல அலுவலர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தொகுதி நான்கில் அடங்கிய தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளில் 890 காலியிடங்களுக்கு மார்ச் 27, 1989 அன்று அறிவிக்கை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

### தொகுதி ஐந்து பணிகள் :—

தொகுதி ஐந்தில் 138 பணியிடங்களை நிரப்புவதற்கு 1987 ஆம் ஆண்டு மே திங்கள் விளம்பரம் செய்யப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 16 மையங்களில் நடைபெற்றது. முதல்நிலை தேர்வின் அடிப்படையில் 828 பணி வேட்பாளர்களை இறுதி நிலைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தேர்வுகளை 1989 ஆகஸ்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### தொகுதி பத்து பணிகள் :—

தொகுதி பத்தில் அடங்கிய 16 பணியிடங்களுக்கு முதல் நிலைத் தேர்வு ஆறு மையங்களில் நடைபெற்றது. இறுதி நிலைத் தேர்வுக்கு 96 பணி வேட்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். 65 நபர்களுக்கு மட்டும் சென்னை மையத்தில் இறுதி தேர்வு நடைபெற்று, தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேர்வாணையம் 35 நுட்பம் சார் பணிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்குரிய எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டங்களை அந்தந்த துறைத் தலைவர்களின் ஆலோசனையுடன் தயார் செய்தது. கடந்த ஆண்டில் 84 நுட்பம் சார் பணிகளுக்கு பாடத்திட்டம் ஒப்புதல் வழங்கப்பட்டது.

பகுதி—5.

## பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவுகள் செய்தல்.

ஏப்ரல் 1, 1988 முதல் மார்ச் 31, 1989 வரையில் உள்ள இடைப்பட்ட ஓர் ஆண்டு காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநிலப் பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் பின் வரும் 12 மாநிலப் பணிகளில் 44 வகைப் பணியிடங்களுக்கு நியமிக்கப்பட தகுதியும் பொருத்தமும் உடைய 390 நபர்களின் பட்டியல் பின் இணைப்பு—3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு கல்விப் பணி.
2. தமிழ்நாடு பொறியியற்பணி.
3. தமிழ்நாடு மருத்துவப்பணி.
4. தமிழ்நாடு பொதுப்பணி.
5. தமிழ்நாடு கூட்டுறவுப் பணி.
6. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைப் பணி.
7. தமிழ்நாடு புள்ளியியல் பணி.
8. தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் விழிப்புப் பணி.
9. தமிழ்நாடு நீதி பணி.
10. தமிழ்நாடு வணிகவரி பணி.
11. தமிழ்நாடு கட்டடக்கலைப் பணி.
12. தமிழ்நாடு சிறைப் பணி.

## பகுதி—6

## சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன.

### 1. ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறை படுத்துதல் :—

(அ) இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுக் கூறு 320(3)-ல் உள்ளபடி தேர்வாணையத்தைச் சாதாரணமாக சட்ட முறைப் படி கேட்காமல் மாநில மற்றும் சார் நிலைப் பணிகளில் உள்ள பதவிகளில் நியமனம் செய்வதற்குத் தமிழ்நாடு அரசுப் பணி யாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்டு 6,629 பதவிகளுக்கு இசைவு கொடுக்கப்பட்டுள்ளது. 29 நிகழ்வுகளில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

| வரிசை எண். | பணிவகை. | இசைவு அளிக்கப் பட்டவை. | இசைவு மறுக்கப் பட்டவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மாநிலப் பணி .. .. | 771 | .. |
| 2. | சார்நிலைப் பணி .. | 447 | 16 |
| 3. | அமைச்சுப் பணி .. .. | 5,411 | 13 |
| | கூடுதல் .. | 6,629 | 29 |

எப்பணிகளில் எந்தெந்த பதவிகளுக்கு அத்தகு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங் கள் பின் இணைப்பு—4இல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிக நியமனங்கள்.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தில் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 3,789 நபர்களை தற்காலிகமாய் நியமனம் செய்து அந்நியமனங்கள் தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

| காலம். | | மாநிலப் பணிகள். | சார்நிலை-அமைச்சுப் பணிகள். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | .. | 649 | 140 |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள். | .. | 789 | 315 |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள். | .. | 746 | 73 |
| 24 மாதங்களுக்கு மேல் .. | .. | 856 | 221 |
| கூடுதல் | .. | 3,040 | 749 |

(இ) தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் 20 (ஏ) (iii) -யின் கீழ் அளிக்கப்பட்ட இசைவு.

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20(ஏ) (iii)-யின்படி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளரின் எண்ணிக்கை 352 ஆகும்.

(ஈ) விதிகள்—பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்.—

அரசால் 478 சட்ட முறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில் 441-ஐப் பொறுத்த வரை விதிகள் வெளியிடுவதற்கு முன்பு தேர்வாணையத்தைக் கலந்தறியப்பட்டது. 21 சட்ட முறை விதிகளுக்கு தேர்வாணையத்தை கலந்தறியவில்லை. மீதம் உள்ள 16 நேர்வுகள் வாலாயமானவை. (இருப்பினும் அவைகள் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குட்படாத பதவிகளுக்காகவோ அல்லது இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுக்கூறு 320(3)-ன்படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ இருந்தன).

**(உ) விதி தளர்த்துதல்—**

அறிக்கைக்குரிய ஆண்டில் 575 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப் பட்டது. ஓய்வூதிய விதிகளைத் தளர்த்தி அரசு 3 நேர்வுகளில் ஆணையிட்டன. அடிப்படை விதிகள் தமிழ்நாடு சிறப்பு ஊதியம் மற்றும் படி விதிகள் மற்றும் தமிழ்நாடு பயணப் படிகளை விதிகள் ஆகியவற்றில் 12 நேர்வுகளில் விதிகளை தளர்த்தி ஆணையிட்டது. அரசே மேலும் 4 நேர்வுகளில் மதராஸ் பங்குத் தொகை பெறு வருங்கால வைப்பு நிதி மற்றும் மதராஸ் பொது வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றில் விதிகளை தளர்த்தி ஆணையிட்டது.

## பகுதி—7.

### ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள் முதலியன.

1. அறிக்கை ஆண்டில் 610 வழக்குகள் மீது (ஏப்ரல் 1, 1988 அன்று நிலுவையிலிருந்து 64 வழக்குகள் உட்பட) தேர்வாணையம் செயல் நடவடிக்கை மேற்கொண்டது. (சென்ற ஆண்டில் ஏப்ரல் 1, 1987 அன்று நிலுவையிலிருந்து 75 வழக்குகள் உட்பட 610 வழக்குகள் மீது தேர்வாணையம் செயல் நடவடிக்கை எடுத்தது). மேற்கூறிய 610 வழக்குகளில் 49 வழக்குகளில் ஆவணங்கள் அல்லது விவரங்கள் கேட்கப்பட்டன. 385 வழக்குகளில் தேர்வாணையத்தின் கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. 176 வழக்குகள் நிலுவையில் நின்றன. இவற்றின் மீது தேர்வாணையம் தனது கருத்துக்களை ஆறு மாதங்களுக்குள் தெரிவிக்க இயலவில்லை. மேற்கண்ட 385 வழக்குகளில் 27 வழக்குகளில் வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்ய தேர்வாணையம் அரசுக்கு கருத்து தெரிவித்தது.

2. தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்பட்ட 476 (385+91) வழக்குகளில் 409 வழக்குகளின் மீது அரசு ஆணை பிறப்பித்தது. 67 வழக்குகள் நிலுவையாக நின்றன.

3. ஒரு வழக்கு தொடர்பாக தேர்வாணையததின கருத தைக் கோரி கடிதம் எழுத அரசு எடுத்துக்கொண்ட சராசரி நேரம் அவ்வழக்கின் மீதான தம் கருத்தை அரசுக்கு பரிந்துரை

செய்ய தேர்வாணையம் எடுத்துக்கொண்ட சராசரி நேரம் அவ்வழக்கில் தமது ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரி நேரம் ஆகியவை பின் வருமாறு :—

| மொத்த வழக்குகளின் எண்ணிக்கை. | ஒழுங்கு நடவடிக்கை மேல் முறையீடு முதலியவற்றில் குற்றச்சாட்டுக் குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக் கோரி அரசு நிலையான கடிதம் அனுப்பிய நாள் வரை எடுத்துக் கொள்ளப்பட்ட சராசரி நேரம். | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தை தெரிவிக்க எடுத்துக் கொண்ட சாராசரி நேரம். | தேர்வாணையம் தனது கருத்தை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரி நேரம். | எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம். (3+4+5). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 409 | 14.38 மாதங்கள். | 7.22 மாதங்கள் | 7.29 மாதங்கள். | 28.89 மாதங்கள் |

மேல் முறையீடு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு, இவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்கு புறம்பாக நடந்துகொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரம் மற்றும் வேறு வகைகளில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கொண்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரம் ஆகியன பின் இணைப்பு-5-ல் காட்டப்பட்டுள்ளன.

## பகுதி—8.

## அறிவிக்கைகள்.

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல பணிகளில் வரும் 965 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 16 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளியிட்ட 16 அறிவிக்கைகள் பட்டியல் பின் இணைப்பு-6-ல் தரப்பட்டுள்ளது.

## பகுதி—9.

## தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள்.

### (அ) சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் :—

1988 ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர் மாதங்களில் சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. இத்தேர்வுகளுக்கு விண்ணப்பித்தோரின் விவரம்.

| | 1988 | |
|---|---|---|
| | மே. | நவம்பர் |
| (1) | (2) | (3) |
| சிறப்புத் தேர்வுகள் .. .. | 22,151 | 16,822 |
| துறைத் தேர்வுகள் .. .. | 18,065 | 14,236 |

சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் வைக்கப்பட்ட தேர்வுப் பாடங்கள் மற்றும் தாள்கள், விண்ணப்பித்தோர், தேர்வு எழுதியவர், தேர்வில் வெற்றி பெற்றோர் ஆகிய விவரங்கள் இணைப்பு—7-ல் தரப்பட்டுள்ளன.

### (ஆ) மாவட்ட உதவி ஆட்சியாளர் காவல் துறை, மற்றும் வனத்துறை அலுவலர்களுக்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் மொழித் தேர்வுகள் :—

மேற்கூறிய தேர்வுகளை தேர்வாணையம் 1988 மார்ச் திங்கள் மற்றும் 1988 செப்டம்பர் திங்களிலும் நடத்தியது. இத்தேர்வு முடிவுகளின் பகுப்பாய்வு பின் இணைப்பு—8-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### (இ) தமிழ் புலமைத் தேர்வு—

தமிழைத் தாய் மொழியாக பெறாத அகில இந்தியப் பணியைச் சார்ந்த ஆட்சித் துறை, காவல் துறை மற்றும் வனத்துறை அலுவலர்களுக்கான சூலை 1988-இல் நடத்தப் பட்ட தேர்விற்கு இருவர் விண்ணப்பித்து தேர்வாணையம் நடத்திய (எழுத்து மற்றும் வாய்மொழித் தேர்வுகள் அடங்கியது) இத்தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர்.

(ஈ) டேராடூனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியில் சேர்வதற்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் தகுதி காண் தேர்வுகள்—

1988 ஆம் ஆண்டில் ஆகஸ்டு மாதம் நடத்த வேண்டிய தேர்வு வயது வரம்பு உயர்த்தப்பட்டதையடுத்து இந்திய அரசு அத்தேர்வை ரத்து செய்தது. 1989 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் இத்தேர்வை தேர்வாணையம் நடத்தியது இத்தேர்வுக்கு 113 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்ததில் 76 விண்ணப்பதாரர்கள் தேர்வில் கலந்து கொண்டனர். இத்தேர்வின் முடிவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

## பகுதி—10.

## தகுதியும் பொருத்தமும் உடைய பணிவேட்பாளர்கள் இல்லாமை.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த தேர்வுகளில் அனைத்து பதவிகளுக்கும் பொருத்தமுடைய பணி வேட்பாளர்கள கிடைத்தனர். பொருத்தமும், தகுதியும் உடைய பணி வேட்பாளர் இன்மையால் எந்த ஒரு பணியிடமும் நிரப்பப்படாமல் விடப்பட இல்லை.

## பகுதி—11.

## அரசும் தேர்வாணையமும்.

(அ) அரசு தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டமைக்கு சான்றுகள் :—

1, செப்டம்பர் 1986-ல் அரசு ஒருவரை அவர் இலங்கை அகதி என்ற காரணத்திற்காக அரசாணை நிலை எண். 2149, பொது (பணி-ஏ) நாள் ஆகஸ்டு 11, 1973-ல் வழங்கப்பட்டுள்ள ஆணையைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொது சார் நிலைப்பணியில் உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவியில் அவரை முறையாக நியமனம் செய்யும் பொருட்டு தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதி 16(பி)-யின் பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவினைக் கோரியது. அரசின் கருத்துருவை பரிசீலித்த தேர்வாணையம், மேற்கண்ட அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணை தற்காலிக நியமனத்திற்கு மட்டுமே பொருந்தும்; முறையான நியமனத்திற்கு பொருந்தாது எனவும், விண்ணப்பதாரர் 1985-ல் உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பித்து இருந்த போதிலும் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 'ஆட்குறைப்பு' தேர்வில் அவரை நேர்முகத் தேர்விற்கு உட்படுத்த தேர்ச்சி பெறவில்லை, எனவும் அவர் ஒருவரது பணியினை வரன்

முறைப்படுத்த இசைவினை அளித்தால் தற்காலிக பணியிலுள்ள மற்ற பர்மா மற்றும் இலங்கை அகதிகளும் தங்களின் பணிகளை அந்தந்த பதவிகளில் வரன் முறைப்படுத்த தேர்வாணையத்தின் இசைவினைக்கேட்க வாய்ப்பிருக்கிறது, போன்ற காரணங்களைக் கூறி விண்ணப்பதாரரை உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவியில் முறையான நியமனம் செய்ய தன் இசைவினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை பிற்பகுதி விதி 16(-பி)யின்படி அளிக்க தேர்வாணையம் மறுத்தது.

அரசு, மார்ச 1987-ல் மீண்டும் மேற்கண்ட அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணைகளின்படி அரசு பணியில் நியமிக்கப்பட்ட தாயகம் திரும்பிய பர்மா மற்றும் இலங்கை அகதிகளை நீண்ட கால பணியிடங்களில் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க வேண்டும்; அவர்களை பணி நீக்கம் செய்யக்கூடாது; அவ்வாறு பணி நீக்கம் செய்ய நேரிட்டாலும் அவர்களை அதே துறையில் வேறு பதவியில் நியமிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வேலை வாய்ப்பளிக்க வேண்டுமெனவும். தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் எனவும், குறிப்பிட்ட வயது மற்றும் கல்வித் தகுதிகள் பெற்றிரா விட்டாலும் சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்தி அவாகளை பணியமர்த்த வேண்டுமெனவும், மேலும் அரசாணை எண் 2024, வருவாய், நாள் மே 15, 1984-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி, பர்மா மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு மறு வாழ்வு, அளிப்பதை ஓர் தேசியக் கொள்கையாக கடைபிடித்து மைய மற்றும் மாநில அரசு பல்வேறு நிலைகளில் சலுகைகள் அளித்து நியமனங்களை வழங்கியுள்ளனவெனவும் அரசு அனைத்துக்காரணங்களையும் கவனமாக பரிசீலித்த பின்னரே விண்ணப்பதாரரை தாயகம் திரும்பிய இலங்கை தமிழர் என்ற காரணத்தாலும், அவர் உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவிக்கான வயது மற்றும் கல்வித் தகுதிகளை நிறைவு செய்பவராக இருந்ததாலும், அவரது குடும்ப சூழ்நிலையைக் கருதியும் சூன் 11, 1986 முற்பகல் முதல் தற்காலிக உதவி புள்ளியியல் உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளாரெனவும் அவரது தற்காலிக பணிகளை முறைப்படுத்தி முறையான நியமனம் செய்ய இதனை ஓர் சிறப்பு தேர்வாகக் கொண்டு மீண்டும் பரிசீலனை செய்து தேர்வாணையத்தின் இசைவினை வழங்குமாறு கேட்டுக் கொண்டது.

தேர்வாணையம் ஏற்கெனவே தெரிவித்திருந்தபடி விண்ணப்பதாரர் உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தாலும், தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஆட்குறைப்பு தேர்வில் அவர் நேர்முகத் தேர்விற்கு அனுமதி பெற தேர்ச்சி பெறவில்லையென்றும், ஆதலால் அவர் அப்பதவிக்கு பொருத்தமற்றவர் என்பது நிரூபணமாகிறது என்ற காரணத்தாலும் தேர்வாணையம் அவரது முறையான நியமனத்திற்கும் தனது இசைவினை அளிக்க மீண்டும் மறுத்தது.

விண்ணப்பதாரர் ஓர் இலங்கை அகதி, பட்டதாரி மற்றும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவராதலாலும் உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகுதி களையும் பெற்றிருப்பதாலும் அரசாணை எண். 2149, பொது (பணி-ஏ), நாள் ஆகஸ்டு 11, 1973 மற்றும் அரசாணை எண். 2024, வருவாய், நாள் மே 15, 1984-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி பர்மா மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதை ஓர் தேசியக் கொள் கையாக கடைப்பிடித்து மைய மற்றும் மாநில அரசுகளில் பல்வேறு நிலைகளில் சலுகைகள் அளித்து நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன போன்ற காரணங்களினால் விண்ணப்பதாரர் உதவி புள்ளியியல் ஆய்வாளர் பதவியில் ஆற்றியுள்ள பணி களை ஜூன் 11, 1986 முதல் வரன்முறைப்படுத்தி, அத்தகைய நியமனத்தை இந்திய அரசியலமைப்பு பிரிவுக்கூறு 320(3)-ன் காப்புரைப்படி ஒழுங்குமுறை விதி வெளியிட்டு தேர்வாணையத் தின் உள்ளீட்டெல்லையிலிருந்து விலக்கப்படும் என்று கூறி அரசாணை எண் 239, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர் திருத்தம் (புள்ளியியல்), நாள் ஏப்ரல் 15, 1988-ல் அவரது பணியை நிரந்தரமாக்கி ஆணையிட்டுள்ளது. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணத்தைத் தவிர பொதுவாக தேர்வாணையத்தின் ஆலோ சனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு ஒரு குறிப்பிட்ட நபரின் தற்காலிக பணியை வரன்முறை செய்து ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர்காலத்தில் இது தொடராது என தேர்வாணையம் நம்பு கிறது.

## 2. அரசாணை எண். 1520, வருவாய் (ஜி-ஸ்பெஷல்-2), நாள் ஆகஸ்ட் 16, 1988 :

தமிழ்நாடு விவசாயத் தொழிற் கழகத்தில் உதவி வருவாய் அலுவலராகப் பணிபுரிந்து வந்தவர் கழகத்திற்குச் சேர வேண்டிய வசூல் பணத்தைக் கையாடல் செய்தமைக்காகவும், வேறு சில முறைகேடுகளுக்காகவும், அவருக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்ட திரண்ட பயனுடன் கூடிய இரண்டாண்டு கால ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை எதிர்த்து அரசுக்கு செய்து கொண்ட மனுவின் மீது, அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்களைக் கோரிய போது, தேர்வாணையம் இந்நேர்வில் விசாரணை அலுவலரால் விசாரணை அறிக்கை வரையப்படவில்லை எனவும், விசாரணை அறிக்கை மனுதாரருக்கு இறுதி ஆணையுடன் அனுப்பி வைக்கப் படவில்லை எனவும், விசாரணை அறிக்கையை இறுதி ஆணை யுடன் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படாதது இந்நேர்வினை வலுவுள்ளதாக்குகிறது எனவும் கூறி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையை ரத்து செய்து, தவறு நேர்ந்த இடத்தி லிருந்து புதியதாக நடவடிக்கை தொடருமாறு பரிந்துரை செய்தது.

ஆனால், அரசு இந்நேர்வில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கடுமையானவை என்றும், அவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணை அலுவலர் விசாரணை அறிக்கையை வரையாததால் அது இறுதி ஆணையுடன் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனவும், மனுதாரர் பணியிலிருந்து ஏற்கெனவே ஓய்வு பெற்றுவிட்டபடியால், அவர் மீது புதிதாக ஓய்வூதிய விதிகளின்படி நடவடிக்கை தொடர இயலாது எனவும் கூறி, தேர்வாணைய கருத்துக்களிலிருந்து மாறுபட்டு, மனுதாரரின் மனுவினை நிராகரித்து ஆணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு ஓய்வூதிய விதி 9(2)-ன்படி அரசு ஊழியர் பணியிலிருக்கும்போது அவர் மீது தொடரப்பட்ட வழக்கினை, அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தொடரலாம். எனவே மனுதாரர் ஜனவரி 1987-லேயே ஓய்வு பெற்றுவிட்டிருந்தாலும், அவருக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை ரத்து செய்து விட்டு குறை கண்ட இடத்திலிருந்து மீண்டும் வழக்கினைத் தொடரலாம். மேலும், விதி எண். 17(பி)-ன்படி, நேர்முக விசாரணையோ, தனி விசாரணையோ நடத்தப்பட்டால நடத்தப்பட்ட விசாரணை குறித்து அறிக்கை வரையப்பட வேண்டும். அவ்வறிக்கையில், விசாரணை அலுவலரின் முடிவும், அவரது முடிவிற்கான காரணங்களும், ஆதாரங்களும் தெரிவிக்கப்படவேண்டும். விசாரணை அலுவலர் விசாரணை அறிக்கையினை வரையாதபோதே வழக்கு வழுவுள்ளதாகும் என்ற நிலையில், அரசு, விசாரணை அதிகாரி விசாரணை அறிக்கையை வரையாததால் அவ்வறிக்கை இறுதி ஆணையுடன் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை, என்று கூறுவது மேற்கூறப்பட்ட விதி 17(பி)-ல் குறிப்பிட்ட நடைமுறைக்கு முரணானது. அரசின் இச்செய்கை, கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களையுடைய நேர்வுகளைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் தேர்வாணைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

3. அரசாணை நிலை எண். 585, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தேதி, ஜூன் 15, 1988 :

ஏப்ரல் 1986-ல் அரசு நாகப்பட்டினம் நகராட்சி முன்னாள் ஆணையர் மீது நகராட்சி நிர்வாக இயக்குநர் விதித்த 6 மாத திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தத்தை எதிர்த்து அவர் அரசுக்கு சமர்ப்பித்த மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேல்முறையீட்டாளர் மீது மூன்று குற்றச்சாட்டுக்களை தமிழ்நாடு குடியுரிமைப்பணி விதிகள் 17(பி)-ன்கீழ் சுமத்தி குற்றச்சாட்டுக்களின் மீது மேல்முறையீட்டாளரின் விளக்கங்களைக் கோரினார். மேல்முறையீட்டாளரும் தனது விளக்கத்தை அளித்தார் விளக்கங்களைப் பரிசீலித்த இயக்குநர் விளக்கத்தின்பால் திருப்தியடையாமல் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிரூபணமாகின்றன என்று கூறி மேல்முறையீட்டாளரின் ஊதிய உயர்வினை ஆறு மாதங்களுக்குத் திரண்ட பயனின்றி நிறுத்தி

வைக்க ஆணையிட்டார். அவ்வாணையை எதிர்த்து மேல் முறையீட்டாளர் தனது மேல் முறையீட்டை அரசுக்கு சமர்ப்பித்தார். அம்மேல் முறையீட்டின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது. தேர்வாணையம் தன் கருத்தினை வழங்கும்போது ஒழுங்குமுறை கையேடு பாகம் நான்கில் பத்தி 2(ii)-ல் கூறியுள்ள நடைமுறையான ஒழுங்குமுறை விதி 17(பி)-நடவடிக்கை எடுக்கும்பொழுது குற்றம் சாட்டப்பட்டவரின் விளக்கத்தைப் பெற்ற பின்பு ஒரு விசாரணை நடத்தாமல் குற்றம் சாட்டப்பட்டவரின் மீது சிறிய தண்டனை விதிக்கப்பட வேண்டியிருந்தால் விதி 17 (எ)-ஐ குறிப்பிட்டு ஒரு காரணம் கேட்கும் குறிப்பாணை ஒன்று அனுப்பப்படவேண்டும். ஆனால் இம்முறை இந்நிகழ்வில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது பின்பற்றவில்லையாதலால் எடுக்கப்பட்ட ஒழுங்கு முறை நடவடிக்கையில் வழு ஏற்பட்டிருக்கிறது என்றும் அதனை நீக்க நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணையை ரத்து செய்து மீண்டும் குறை ஏற்பட்ட இடத்திலிருந்து ஒழுங்கு நடவடிக்கையைத் தொடர வேண்டுமென அறிவுறுத்தியது. அரசு மேல் முறையீட்டாளர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும் குற்ற குறிப்பாணையுடன் இணைத்து அனுப்பப்பட்ட வினாப்பட்டியலில் அவர் நேர்முக விசாரணை அல்லது நேர் கேட்பு வேண்டும் என்று கேட்கவில்லை என்றும் எனவே ஒரு விசாரணை நடத்தவேண்டியது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தவர்களின் கடமையல்ல எனவும் விதி 17(பி)-ல் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்து தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக மேல்முறையீட்டாளரின் தண்டனையாக 6 மாத ஊதிய உயர்வை ஒரு மாதமாகக் குறைத்தும் மேல்முறையீட்டையும் தள்ளுபடி செய்தும் ஆணையிட்டுள்ளது. தேர்வாணையம் குறிப்பிட்டுள்ள ஒழுங்கு முறை கையேடு பாகம் நான்கில் பத்தி 2(ii)-ல் கூறப்பட்டுள்ள விதியானது 1965ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றம் ரிட் மனு 4483 மீது (வெங்கடவரதன்) (சென்னை மாநிலம்) வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். தேர்வாணையத்தின் கருத்தை ஏற்காத இச்செய்கை அரசு கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமாக காரணங்களையுடைய நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கடைபிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

4. <u>அரசாணை நிலை எண். 2260 சுகாதாரம், இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்ப நலம், நாள் நவம்பர் 23, 1988 :</u>

அக்டோபர் 1987-ல் அரசு முன்னாள் உதவி மருத்துவர், அரசினர் மருத்துவ மனை, முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம், மனுதாரர் அரசு விதித்த பணி நீக்க ஆணையை எதிர்த்து, அரசுக்கு சமர்பித்த மறு ஆய்வு மனு மீது

தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. மனுதாரர் உதவி மருத்துவராக அரசினர் மருத்துவ மனை முதுகுளத்தூரில் 1983 ஆம் வருடம் பணியாற்றி வந்தார். மருத்துவப்பணி மற்றும் குடும்பநல இயக்குநர் தனது அக்டோபர் 24, 1983 நாளிட்ட ஆணையின் மூலம் மனுதாரரை இ.எஸ். ஐ. மருத்துவ மனை சாத்தூருக்கு மாறுதல் செய்து உத்தரவிட்டார். மனு தாரர் அரசினர் மருத்துவ மனை முதுகுளத்தூரிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஆனால் அவர் இ.எஸ். ஐ. மருத்துவமனை சாத்தூரில் பணியேற்கவில்லை. அவர் தனக்கு நவம்பர் 20, 1983 ஆம் தேதியிலிருந்து விடுப்பு கேட்டு விண்ணப்பித்தார். அவருடைய விடுப்பு கோரிக்கை மறுக்கப்பட்ட போதும் அவர் மாறுதல் செய்யப்பட்ட புதிய இடத்தில் பணியேற்காமல் விடுப்பை மே 26, 1985 வரை நீட்டித்தார். எனவே, மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர் மனுதாரர் மீது, மேல் அலுவலர்களின் ஆணைக்குக் கீழ்படியாமை என்னும் குற்றத்தை தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (பாகுபாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் விதி 17(ஆ) வின் படி சுமத்தினார். மனுதாரர் தனது விளக்கத்தை சமர்ப்பித்தார். விசாரணை நடைபெற்றது. விசாரணை அலுவலர் தனது அறிக்கையில் குற்றச்சாட்டு நிரூபணமாவதாகத் தெரிவித்தார். மருத்துவப்பணி மற்றும் குடும்பநல இயக்குநர் இவ்வழக்கை இறுதி ஆணை வழங்கும் பொருட்டு அரசுக்கு அனுப்பி வைத்தார். இவ்வழக்கு குறித்து தேர்வாணையத்தின் ஆலோசனையை அரசு கோரிய தில், தேர்வாணையம் மனுதாரரை பணியிலிருந்து நீக்கலாம் என்ற கருத்தினை வழங்கியது. அதன்படியே அரசு மனு தாரரை பணியிலிருந்து நீக்கி ஆணை வெளியிட்டது. மேற்கண்ட அரசின் ஆணையை எதிர்த்து மனுதாரர் தனது மறு ஆய்வு மனுவினை அரசுக்கு அனுப்பி வைத்தார். அரசு மேற்படி மனுதாரரின் மறு ஆய்வு மனு மீது தேர்வாணையத்தின் ஆலோ சனையை கோரியபோது, தேர்வாணையம் 'மனுதாரர் பணியிலி ருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும்' என்ற தனது முந்தைய கருத்து முற்றிலும் நியாயமானதே என தெரிவித்து மனுதாரரின் மறு ஆய்வு மனுவை சாரமற்றதாகக் கருதி தள்ளுபடி செய்ய லாம் என ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக மறு ஆய்வு மனுதாரரின் தண்டனையான ''பணி நீக்கம்'' என்பதை மாற்றி ''இரண் டாண்டுகளுக்கு திரண்ட பயனுடன் ஊதிய நிறுத்தம்'' என்று ஆணையிட்டுள்ளது.

அரசு மேற்கண்ட ஆணையை வெளியிடுவதற்கு கீழ்க்கண்ட காரணத்தை கூறியுள்ளது :—

> ''இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் அரசினர் மருத்துவ மனையில் உதவி மருத்துவராக பணியாற்றிய மனுதாரர் முதுகுளத்தூரில் அப்போது நிலவிய சூழ் நிலையில் அவர் அங்கு பணியாற்றுவது நிலைமையை இன்னும் மோசமாக்கும் என்ற மந்தன அறிக்கையின் பேரில் அவர் கோவில்பட்டி இ. எஸ், ஐ. மருத்துவ

மனைக்கு மாற்றம் செய்து நியமிக்கப்பட்டார். இந்த இடமாற்றத்தை மறுத்து அவர் பணியேற்கவில்லை. இதனை இயற்கையாக எதிர்ப்பு மற்றும் கீழ்படியாமை என்று கருதினாலும் அவரது மாற்றத்திற்கு மூலகாரணம் இனப்பிரச்சினையின் அடிப்படையில் அமைந்ததாகும். இந்த சூழ்நிலையே மனுதாரர் பணியில் சேராமைக்கு காரணமாக அமைந்தது.''

எனவே இவ்வழக்கில் அரசு கருணையின் பேரில்'' ஆணையிட்டுள்ளது''. அரசு தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறாக ஆணை வெளியிட்டிருப்பது அரசின் கொள்கை முடிவின் பேரில் அல்லாமல் கருணையின் அடிப்படையில் உள்ளது. அரசு மாற்றல் உத்தரவை பிறப்பிக்க காரணமாக இருந்த சிறப்பு சூழ்நிலையை மனுதாரரின் மறு ஆய்வு மனுவை பரிசீலனை செய்யப்பட வேண்டிய கட்டத்தில் கூட தேர்வாணையத்தின் கவனத்திற்கு கொணரப்படவில்லை. இச்செய்கை அரசு கொள்கை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கடைபிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

## (5) அரசாணை எண். 256, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை, நாள் டிசம்பர் 23, 1988.

கால்நடை பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அதற்குத் தண்டனையாக அவரது அடுத்த ஊதிய உயர்வின் திரண்ட பயனின்றி ஆறு மாத காலத்திற்கு நிறுத்தி வைத்து, கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரால் இடப்பட்ட ஆணையை எதிர்த்து, அரசுக்கு உதவி இயக்குநரால் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அரசு, 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்தது. அதன் மீதான தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியிருந்தது. இந்த மேல் முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம் என்று தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு, இந்த வழக்கில் கால்நடைப் பராமரிப்பு இயக்குநருக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் இல்லை என்றும், அதனால், வழங்கப்பட்ட தண்டனை முறையானது அல்ல என்றும் இந்த வழக்கில் பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகள் முறையானது அல்ல என்றும் கூறி இதன் மீதான தேர்வாணையத்தின் கருத்தினைக் குறிப்பாகக் கோரியது. அரசின் வாதங்களுக்கு அடிப்படையான விதிகள் அல்லது ஆணைகள் ஏதாவது இருந்தால் அதைத் தெரிவிக்கும்படி அரசை, தேர்வாணையம் கேட்டுக் கொண்டது. ஒழுங்கு முறை கையேட்டின் 4-வது அத்தியாயத்தின் மூன்றாவது பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் வழிகாட்டு நெறிமுறைகளை அரசு

சுட்டிக் காட்டியது. அதற்குத் தேர்வாணையம் கீழ்க்கண்டவாறு பதிலளித்தது ;—

''தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல் முறையீடு) எந்தவொரு விதியிலும், அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலரின் மீது அரசு மட்டுமே, விதி எண். 17(பி)-ன்படி குற்றச்சாட்டு சுமத்தி இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று குறிப்பிடப்படவில்லை. அதே போல அந்த விதிகள் ஒரு துறையில் தலைவர், தனக்கு கீழுள்ள அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலரின் மீது விதி எண். 17(பி)-ன்படி குற்றச்சாட்டு சுமத்துவதற்கு தடை ஒன்றும் சொல்லவில்லை. உண்மையில் விதி எண். 9(சி) (2) சிறு தண்டனை வழங்கும் அதிகாரம் உடையவர்களுக்கு, பெரிய தண்டனை வழங்கும் அதிகாரம் இல்லாவிடினும், பெரிய தண்டனை வழங்கக்கூடிய வகையில் அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அனுமதியளிக்கிறது. இந்த வழக்கில் கடலூர் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல துணை இயக்குநர், மேல் முறையீட்டாளர் மீது குற்றச்சாட்டு சுமத்தி, விசாரணையும் நடத்தி துறைத் தலைவரான இயக்குநருக்கு சம்பந்தப்பட்ட கோப்புகளை முடிவான ஆணைக்காக அனுப்பியிருக்கிறார்.''

''ஒழுங்கு முறைக் கையேட்டின் 4-வது அத்தியாயத்தின் 2-வது பத்தியின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் உடையவர், ஏதாவது சிறிய தண்டனை வழங்க விரும்பினால் அவ்வாறு வழங்க வழிவகை செய்கிறது. ஆனால் அத்துடன் விசாரணை அறிக்கையின் நகலொன்றினையும் சேர்த்து வழங்க வேண்டும். இந்த நடைமுறையின் படி, இந்த வழக்கில் கடைப்பிடிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் சரியானவையே.

மேலும் ஒரு அதிகாரியின் தகுதி என்பது, சிறிய அல்லது பெரிய தண்டனை வழங்குவதை வைத்துதான் நிர்ணயிக்கப்படுகிறதே யொழிய, ஒழுங்கு முறை நடவடிக்கை எந்த வி தியின் அடிப்படையில் 17(அ) அல்லது 17(ஆ) எடுக்கப்படுகிறது என்பதை வைத்து அல்ல. இந்த வழக்கில் அரசே நடவடிக்கை எடுத்து, குற்றம் சாட்டியிருக்குமானால், அந்த குற்றங்களின் அடிப்படையில் இயக்குநரால் தண்டனை வழங்கியிருக்க முடியாது. ஆனால் இந்த வழக்கில் மண்டல துணை இயக்குநரால் நடவடிக்கை தொடரப்பட்டு குற்றமும் சாட்டப்பட்டு இயக்குநரால் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது.''

இதற்கு பின்பும் அரசு ஒழுங்குமுறை நடவடிக்கை கையேட்டின் பகுதி 2-ல் அத்தியாயம் 2-ல் உள்ள 8(2) பத்தியைச் சுட்டிக் காட்டித் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் தன் முந்தைய நிலையையே அரசுக்கு ஆலோசனையாக வழங்கியது. மேலும் இந்த விதிகளில் ஏதாவது சந்தேகமோ, முரண்பாடுகளோ தென்பட்டால், பணி மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையை வேளாண்மைத் துறை கலந்து கொள்ளலாம் என்றும் கூறியது.

ஆனால், அரசு, தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு தமிழ்நாடு குடிமுறை பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 8 மற்றும் 9(சி)(2)-யைச் சுட்டிக் காட்டி இயக்குநரின் நடவடிக்கைகளை தள்ளுபடி செய்தது. இச்செய்கை கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களை உடைய நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கடைபிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

6. அரசாணை நிலை எண். 1285, தொழில் துறை (இ1) நாள் டிசம்பர் 14, 1988 :

ஜூன் 1987-ல் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மீதான தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியது. குற்றம் சாட்டப்பட்டவர் 1980ஆம் ஆண்டில், சேலம் மாவட்ட தொழில் மையத்தில் மேலாளராக (மூலப்பொருட்கள் மற்றும் உள்ளமைப்பு) பணிபுரிந்து வந்தார். இப்பதவிக் காலத்தில், நான்கு சாகோ ( Sago ) தொழிற் சாலைகளுக்கு சிமிட்டி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்குவதில் சில முறைகேடுகளை அவர் செய்தது தெரியவந்ததால், சேலம் மாவட்ட தொழில் மையம், பொது மேலாளர், குற்றம் சாட்டப்பட்டவரின் விளக்கத்தினைக் கோரினார். குற்றம் சாட்டப்பட்டவர் தனது விளக்கத்தை அளித்தார். பொது மேலாளர், குற்றம் சாட்டப்பட்டவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தொழில் மற்றும் வாணிப இயக்குநருக்கு இப்பொருள் பற்றி அறிக்கை அனுப்பினார். தொழில் மற்றும் வாணிப இயக்குநர் தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (பாகுபாடு, கட்டுப்பாடு மற்றும் மேல் முறையீடு) விதிகளில், விதி 17(ஆ)-ன்படி மூன்று குற்றச்சாட்டுகளைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது விளக்கத்தினையும் பூர்த்தி செய்யப்பட்ட வினாப்பட்டியல் படிவத்தையும் அளித்தார். அவர் கேட்டுக் கொண்டபடி நேர்முக விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை அலுவலர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகின்றது எனத் தெரிவித்து தனது அறிக்கையை தயாரித்தளித்தார். தொழில் மற்றும் வாணிப இயக்குநர், இவ்வழக்கினை இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டி, அரசுக்கு அனுப்பினார். இவ்வழக்கில் அரசு தற்காலிகமாக ஒரு முடிவுக்கு வந்து, இவ்வழக்கில் பிறப்பிக்க வேண்டிய ஆணையின் பொருட்டு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. ஓய்வூதியத்தை மிகவும் பாதிக்கும்படியான திரண்ட பயனுடன் கூடிய மூன்றாண்டு ஊதிய உயர்வு நிறுத்தம் என்னும் தண்டனையைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கலாம் என்று தேர்வாணையம் தனது ஆலோசனையை வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணையத்தின் அறிவுரைக்கு மாறாக, குற்றஞ்சாட்டப்பட்டவரை அரசு குடிமுறைப் பணிகளிலிருந்து நீக்கம் செய்து ஆணை பிறப்பித்தது. அரசு இத்தகைய ஆணையைப் பிறப்பித்து கீழ்க்கண்ட காரணங்களைக் குறிப்பிட்டது :—

''அரசு குற்றச்சாட்டுக்களைக் கடுமையானதாக கருது வதில் நியாயம் உள்ளது என்று கருதுகிறது. குற்றஞ் சாட்டப்பட்டவர் பிரச்சினைக்குரிய இடங்களை உள்ள படியாக பார்வையிடாமலும், ஆய்வு செய்யாமலும், தேவையான அளவுக்கு மேல் அதிகமாக சிமிட்டி ஒதுக் கீடு செய்வதில் பரிந்துரை செய்தது மற்றும் பயணப்படி பட்டியல் சமர்ப்பித்தது மூலமாக பொய்யான உரிமை கோரியது ஆகிய செயல்கள் குற்ற வாளி அலுவலரின் நடைமுறை மற்றும் கடமை தவறிய செயல்களாக உள்ளன. தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங் களின் பேரில் சிமிட்டி ஒதுக்கீடு செய்யும் கடமைப் பொறுப்புள்ள ஆய்வுப்பணி ஒப்புவிக்கப்பட்ட ஒரு பொறுப்புள்ள அலுவலர், நேரடி ஆய்வு ஏதும் செய்யா மல் பொறுப்பற்ற முறையில் பரிந்துரை செய்துள்ளார். இச்செயல் அவரது உட்கருத்தைத் தெளிவாக காட்டு கிறது. துறைக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் இத்தகைய அலுவலர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். என்று அரசு கருதுகிறது. ஊழல் மற்றும் முறை கேடான செயல்களிலிறங்க தூண்டப்படும் பிற அலு வலர்களுக்கு இந்நடவடிக்கை ஒரு அச்சுறுத்தல் போன்றதாகும். எனவே, தேர்வாணையம் கருதிய தண்டனை போதுமானது அல்ல என்றும் 'அரசுப்பணி யிலிருந்து நீக்கம் செய்தல்' என்பதுதான் இவ் வழக்கில் பிறப்பிக்கப்படும் சரியான தண்டனையாகும். என்றும் கருதி அரசு அவ்வாறே ஆணை இட்டுள்ளது.''

தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக ஆணையிட்ட செய்கை அரசு கொள்கை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்துன் கருத்தினை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

7. அரசாணை நிலை எண். 2116, உள்துறை (சிறை), தேதி செப்டம்பர் 8, 1987 :

1986ஆம் ஆண்டு மே மாதம், முன்னாள் வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர் அவர்கள் இரண்டாம் நிலைக்காவலர் பதவியிலிருந்து முதல் நிலைக் காவலர் பதவிக்கு தகுதி யானவர் பட்டியல் சிறைத் துறைத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் சிறைத்துறை தலைவரின் அறிவுரையை மீறி 3 இரண்டாம் நிலைக் காவலரை முதல் நிலைக் காவலராக நியமித்ததற்காக அவர் மீது வழங்கிய திரண்ட பயனின்றி ஓராண்டு ஊதிய உயர்வை நிறுத்திய ஆணையை எதிர்த்து அவர் அரசுக்கு சமர்ப்பித்த மறு ஆய்வு மனு மீது தேர்வாணை யத்தின் கருத்தினை கோரியிருந்தது. தேர்வாணையம் சம் பந்தப்பட்ட பதிவுருக்களை கவனமாக ஆராய்ந்த பின்பு மறு ஆய்வு மனுதாரர் மீது வழங்கப்பட்ட தண்டனை அவர்

செய்த தவறான செய்கைக்கு அதிகமானதல்ல என்று கூறி மறு ஆய்வு மனுவை நிராகரிக்க பரிந்துரை செய்தது. ஆனால் அரசு ஒப்புதல பட்டியலுக்கு ஒப்புதல் அனுப்புவ தென்பது ஒரு முறைமைக்கு ( formal ) மட்டும் தான் என்றும கணகாணிப்பாளர் தான் நியமன அலுவலர் என்றும் மறு ஆய்வு மனுதாரர் கூறியுளளதாக அரசால் சொல்லப் பட்டுள்ளது. மேற்படி கூற்றினை கருத்தில் கொண்டு திரண்ட பயனற்ற ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை திரண்ட பயனற்ற ஆறுமாத கால ஊதிய உயர்வு நிறுத்தமாகக் குறைத்து தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக ஆணை பிறப்பித்துள்ளது. இச்செய்கை அரசு கொளகை சம்மந்தப் பட்ட மற்றும கட்டாயமான காரணங்களையுடைய நிகழ்வு களைத் தவிர மற்றெல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முறையாக கடைபிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

8. அரசாணை நிலை எண். 424, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் ஏப்ரல் 21, 1988 :

1986 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இடைப்பாடி முன்னாள் நகராட்சி ஆணையரின் ஊதிய உயர்வினை ஓராண்டுக்கு திரண்ட பயன்ன்றி நிறுத்தி வைத்த நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணையை எதிர்த்து அவர் அரசுக்கு சமர்ப்பித்த மேல் முறையீட்டின் மீதான தேர்வாணையத்தின் கருத்தினை கோரியிருந்தது. தேர்வாணையம் இவ்வழக்கு சம்பந்தப் பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தபின் 4 குற்றச்சாட்டு களும் சநதேகமின்றி நிரூபிக்கப்படுவதாலும் மேல முறை யீட்டில் ஏறறுக் கொள்ளத் தக்க வாதங்கள் ஏதுமில்லையாத லாலும் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்தது. அரசு மேல் முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஊதிய உயர்வினை நிறுத்தி தண்டனை வழங்குமளவுக்கு மிகக் கடுமையானதல்ல என்பதாலும் தவறான எண்ணமோ வேலையில் கவனமின்மையோ நிரூபிக்கப் படவில்லை என்பதாலும் அவருக்கு வழங்கப்பட்ட ஒரு ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை மாற்றி 'கண்டனம்' தண்டனையை தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக பிறப்பித்துள்ளது. இச்செய்கை அரசு கொள்கை சம்பந்தப் பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களை உடைய நிகழ்வு களைத் தவிர மற்றெல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முறையாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

(ஆ) தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை சில சான்றுகள்:

1. அரசாணை எண். 1750, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், நாள் செப்டம்பர் 11, 1987-ல் அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது :—

(1) தமிழ்நாடு மருத்துவப்பணி சார்ந்த பிரிவு 1 மருத்துவத்திற்கான சிறப்பு விதிகளில் செயல்

அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாத உதவி அறுவை மருத்துவர்களை பணி நீக்கம் செய்வது குறித்த வழிவகை நீக்கப்பட்டது.

(2) செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறாத உதவி அறுவை மருத்துவர்கள் தெரிவு நிலை பதவி உள்பட உயர் பதவிகளுக்கு பதவி உயர்வுக்கு தகுதி பெறமாட்டார்கள். மேலும் அவர்கள் குறிப்பிட்ட தேர்வில் தேர்ச்சி பெறும் வரை அவர்களின் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கப்படும்.

மேற்கண்ட ஆணைகள் வெளியிடப்படும் முன் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படவில்லை. அலுவல் முறை சாராக் குறிப்பு எண். 4020/54-2, பொது (பணிகள்) நாள் செப்டம்பர் 11, 1954-ன்படி நியமன முறை அல்லது நியமனம் செய்ய பின்பற்ற வேண்டிய கொள்கை மற்றும் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லையில் உள்ள பதவிகளுக்கான பதவி உயர்வு முறைகளை பாதிக்கும் முடிவுகளை எடுக்கும் முன்னரே தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமாகும். அது தவிர்த்து விதிகளை தொகுக்கும்போதோ அல்லது விதிகளுக்குத் திருத்தம் வெளியிடும் தருணத்திலோ, கலந்தாலோசனை செய்தால் போதாது. ஆகையால் அரசு ஆணை வெளியிடும் முன்னரே தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காததற்கான காரணத்தைத் தெரிவிக்குமாறு கோரப்பட்டது. அதற்கு அரசு, நியமன முறை அல்லது பின்பற்ற வேண்டிய கொள்கை அல்லது தகுதி ஆகியவற்றை பாதிக்காத செயல் அலுவலர் தேர்வுக்கான சில விதி ஒதுக்கீடுகளை நீக்கி ஆணை வெளியிடப்பட்டதென்றும் எனவேதான் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் எதிர்காலத்தில் இது போன்ற பொருள் பற்றி செயல்முறை ஆணை வழங்கும் முன்னர் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கும் எனவும் தெரிவித்தது. பதவி உயர்வுக்கான தேர்வை நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டதால் அது நியமன முறை அல்லது அதற்கான கொள்கையை பாதிக்காத செயல் என்ற அரசின் கூற்று சரியானதல்ல. அரசின் இச்செய்கை அரசு தானே பிறப்பித்துள்ள ஆணைகளுக்கு முரணாக உள்ளது. இம்மாதிரியான விடுபாடுகள் இனி தொடராது எனத் தேர்வாணையம் நம்புகிறது.

2. அரசாணை (நிலை) எண். 1202, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி, நாள் ஆகஸ்ட் 12, 1983-ல் அரசு, நகராட்சி இயக்குநரின் நேர்முக உதவியாளர் பதவிகளில் ஒன்று இயக்குநரகத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கென ஒதுக்கப்பட்டது. என்றும், இந்த நெறிவிற்கு முன்னர் நகராட்சி ஆணையராக பணி புரிந்திருக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண். 104, உள்ளாட்சி மற்றும் நீர் வழங்கல், நாள் பிப்ரவரி 18, 1985-ல்

நகராட்சி ஆணையர் பதவியில் அனுபவம் இருக்க வேண்டும் என வற்புறுத்தாமல், நகராட்சி இயக்குநரகத்தில் பணியாற்றும் அலுவலர்களிலிருந்து தகுதி மற்றும் பணிமூப்பு அடிப்படையில் நகராட்சி ஆணையரின் கூடுதல் நேர்முக உதவியாளர் பதவிக்கு பதவி உயர்வு அளித்து நிரப்பப்பட வேண்டும் என்ற கருத்தில் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயல் ஆணையிடப்படு வதற்கு முன்னர் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கவில்லை. அலுவல் முறை சாராக் குறிப்பு எண். 4020/54-2, பொது (பணிகள்), நாள் செப்டம்பர் 11, 1954-ன்படி விதிகள் உருவாக்கும் நேரத்தில் அல்லது அதற்குரிய விதி திருத்தம் வெளியிடும் நேரத்தில் மட்டும் அல்லாமல் நியமன முறையை பாதிக்கும் முடிவு எடுப்பதற்கு முன்னரும் அல்லது தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குட்பட்ட பதவிகளுக்கு நியமனம் செய்ய கடைபிடிக்கும் கொள்கைக்கு மாற்றம் செய்யப்படுவதற்கு முன்னரும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டும். எனவே, அலுவல்முறை ஆணை வெளியிடப்படுவதற்கு முன்னர், தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காததற்கான காரணத்தைத் தெரிவிக்குமாறு அரசிடம் கோரப்பட்டது. நகராட்சி இயக்குநரக அமைச்சு பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசே முடிவு எடுத்து செயல் ஆணை வழங்கப்பட்டது என்றும், அவ்வாணை வெளியிடுவதற்கு முன்னர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்க முடியவில்லை என்றும், இருப்பினும் பணி விதிகள் உருவாக்கும் முன்னர் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்பட்டது எனவும் அரசு தெரிவித்துள்ளது. இது அரசு வகுத்த நெறிமுறைகளை அரசே மீறும் ஒரு நேர்வு ஆகும். இம்மாதிரியான விடுபாடுகள் இனி தொடராது என தேர்வாணையம் நம்புகிறது.

3. பள்ளிக் கல்வித்துறையின் ஆசிரியர்களுக்கு மட்டும் தனியாக தெரிவு செய்யும் வாரியம் ஒன்று ஏற்படுத்துவது அல்லது ஆசிரியர்கள் நியமனத்திற்காக மட்டும் அவர்களுக்கென்று தேர்வாணைய அலுவலகத்தில் தனியாக ஒரு பிரிவு (Wing) ஏற்படுத்துவது, போன்ற பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவின்மீது தேர்வாணையத்தின் கருத்தைப் பெற்று அனுப்புமாறு பிப்ரவரி 1984-ல் அரசு கல்வித்துறை கோரியது. அரசுத்துறையில், குறிப்பிட்ட ஒரு துறைக்காக ஆசிரியப் பணியாளர்களைத் தெரிந்தெடுப்பதற்கு மட்டுமே ஒரு தேர்வாணையத்தைத் தோற்றுவிப்பது, சம்பந்தப்பட்ட அனைவரது நலனையும் கருதுவதாக அமையாது என்றும், எனவே, பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்றுக்கொள்ள இயலாதென்றும் தேர்வாணையம் அரசுக்குத் தெரிவித்தது. ஆனால், அரசு, அரசாணை எண். 1319, கல்வி, நாள் ஆகஸ்ட் 17, 1987-ல் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி மற்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்விச் சார்நிலைப் பணியில் அடங்கிய பதவிகளைத் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லையிலிருந்து விலக்க ஆணையிட்டது. மேலும், அரசாணை எண். 1320, கல்வி, நாள் ஆகஸ்ட் 17, 1987-ல் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் வாரியம் ஒன்றைத் தனியாக அமைக்க ஆணை பிறப்பித்தது. தேர்வாணையம்,

மேற்குறிப்பிட்டுள்ள அரசாணைகளில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஆணைகளை மறு பரிசீலனை செய்யுமாறும், மீண்டும் அப்பதவிகளைத் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் கொண்டுவருமாறும் வேண்டுகோள் விடுத்தது. ஆனால், தேர்வாணையத்தின் வேண்டுகோள் அரசால் நிராகரிக்கப்பட்டது. அதிக முக்கியத்துவம் வாய்ந்த பல பதவிகள் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் இருந்து வரும்போது, ஆணையம் தனக்கு அரசமைப்பு சட்டத்தின்படி விதிக்கப்பட்ட பணிகளைச் சரிவர செய்து வரும் போது, ஆசிரியப் பணிகளைத் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லையிலிருந்து விலக்கியிருப்பது நியாயமற்றது என்று தேர்வாணையம் வருத்தத்துடன் தெரிவிக்கிறது.

